பக்கங்கள் 18 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 18 திங்கட்கிழமை 02.03.2026 | அதிர்வு 214

### மத்திய கிழக்கு நெருக்கடி:

## அவசர கூட்டத்துக்கு சஜித் அழைப்பு!



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றம் மற்றும் அங்குள்ள இலங்கையர்களின்

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## யார் நடத்தினாலும் போரை ஏற்க முடியாது!

### மத்திய கிழக்கில் போர் நிறுத்தம் கோரி இலங்கை அரசு அதிரடி அழைப்பு

“மத்திய கிழக்கில் மூண்டுள்ள போர் உடனடியாக நிறுத்தப்பட்டு, உலக அமைதி நிலைநாட்டப்பட வேண்டும்” என்று இலங்கை அரசு, சர்வதேச சமூகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க தகவல்

04



### சுகததாச அரங்கில் கர்ஜித்த குமார் குணரத்தினம்

# அமெரிக்காவைக் கண்டிப்பதற்கு ஐ.நாவுக்கு முதுகெலும்பு இல்லை!

## இலங்கையை விற்கத் துணியும் மோடி - ட்ரம்ப் - அநுர கூட்டணி

”உலகையே அச்சுறுத்தி வரும் அமெரிக்காவின் கொடூரமான அதிகாரப் போட்டிக்கு எதிராகக் குரல் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு முதுகெலும்பு இல்லை” என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரத்தினம் மிகக் கடுமையான சாடல்களை முன்வைத்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ‘வர்க்கத்திற்கு அதிகாரம் - அதிகாரத்திற்கு கட்சி’ எனும் அக்கட்சியின் 4-வது தேசிய மாநாட்டில் தலைமையுரையாற்றும்போதே அவர் இந்த அதிரடித் தாக்குதலைத் தொடுத்தார்.

04

## வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை இரு வாரங்களுக்கு விசா காலம் நீடிப்பு

### கட்டணம் கிடையாது என்றும் அரசு அறிவிப்பு




மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றம் மற்றும் விமானப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையை விட்டு வெளியேற முடியாமல் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் விசா காலத்தை இரண்டு வாரங்களுக்கு நீடிக்க அரசு

04

# அச்சமடையாதீர்கள்! நாம் பாதுகாப்போம்!!

## அமீரகத்தில் உள்ள இலங்கையர்களுக்குத் தூதுவர் உறுதி



மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண போர்ச் சூழலைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கைத் தூதுவர் அருஷா குரே அறிவித்துள்ளார்.

இலங்கைத்தூதரகம் வெளியிட்டுள்ள அந்த விசேட பாதுகாப்பு வழிகாட்டல்கள் வருமாறு:-

**நேரடி கண்காணிப்பில் தூதரகம்**

ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுடன் இலங்கை தூதரகம் 24 மணிநேரமும் நேரடித் தொடர்புகளைப் பேணி வருகின்றது. நிலைமைகளை உடனுக்குடன் அவதானித்து வருவதாகவும், இலங்கையர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

**விசேட சேவைப் பிரிவு உருவாக்கம்**

அவசர தேவைகள் மற்றும் இடர் காலங்களில் இலங்கையர்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதற்காக தூதரகத்தினால் விசேட சேவைப் பிரிவு ஒன்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

**பொதுமக்களுக்கான முக்கிய அறிவுறுத்தல்கள்:**

**உத்தியோகபூர்வ தகவல்கள்**

போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பான இடங்கள் மற்றும் விமான நிலையங்களின் தற்போதைய நிலை குறித்த அறிவிப்புகள் இலங்கை தூதரகம் மற்றும் டுபாய் கொன்சியூலர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கங்களில் உடனுக்குடன் பதிவேற்றப்படும். சமூக வலைத்தளங்கள் ஊடாக இவற்றைத் தொடர்ச்சியாக அவதானிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

**சுற்றுலாப் பயணிகள்**

தற்போது சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டிருப்போர், தத்தமது விமான சேவை நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா முகவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**போலிச் செய்திகளை தவிர்க்க வேண்டும்**

தேவையற்ற வதந்திகள் மற்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை நம்ப வேண்டாம் எனவும், உத்தியோகபூர்வ அறிவிப்புகளை மாத்திரம் பின்பற்றுமாறும் தூதுவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இலங்கையர்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை எனவும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் தூதுவர் அருஷா குரே மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# மனைவியைக் கழுத்தறுத்து படுகொலை செய்த கணவன்

## மாரவிலவில் நள்ளிரவு கொடூரம்

**(க.மகாதேவன்)**

புத்தளம், மாரவில, கட்டுநேரிய பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கொடூரமான முறையில் கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடிய கணவனைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

மாரவில, கட்டுநேரிய - பேன்கட பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கோரச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று நள்ளிரவு 11.40 மணியளவில் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்துக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து, மாரவில பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

பொலிஸார் வீட்டைச் சோதனையிட்டபோது, அந்தப் பெண் தனது படுக்கையறையிலேயே இரத்த வெள்ளத்தில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

சந்தேகநபரான கணவன், தனது மனைவியின் கழுத்தைக் கத்தியால் அறுத்துக் கொடூரமான முறையில் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நீண்டகாலமாக நிலவி வந்த குடும்பத் தகராறு எல்லை மீறியதே இந்த விபரீத முடிவுக்குக் காரணம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது நீதிவான் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தைக் கண்டறியவும், தலைமறைவாகியுள்ள சந்தேகநபரைப் பிடிக்கவும் மாரவில பொலிஸார் விசேட குழுக்களை அமைத்து விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# குவைத் மீது ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்: இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு இல்லை

## அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் தூதுவர் அறிவிப்பு

குவைத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்களை இலக்கு வைத்து ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில், அங்கு வசிக்கும் இலங்கையர்கள் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் லக்ஷித ரத்நாயக்க அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஈரானின் தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும், குவைத்தில் உள்ள இலங்கையர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்பதைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுவரை இலங்கையர்கள் எவருக்கும் காயங்களோ அல்லது உயிராபத்துக்களோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் குவைத்தில் உள்ள இலங்கையர்கள் மற்றும் இலங்கையில் உள்ள அவர்களது உறவினர்கள் மத்தியில் நிலவும் பதற்றத்தைக் கருத்திற்கொண்டு தூதுவர் பின்வரும் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

**அச்சம் வேண்டாம்**

இலங்கையர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் இது குறித்து



அநாவசியமான அச்சம் கொள்ளத் தேவையில்லை.

**தொடர் கண்காணிப்பு**

நிலைமையை இலங்கைத் தூதரகம் மிகவும் அவதானத்துடன் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றது.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விவகாரங்கள் தொடர்பில் குவைத் பாதுகாப்புப் பிரிவினருடன் தூதரகம் நேரடித் தொடர்பில் உள்ளது. ஏதேனும் அவசரத் தேவைகள் ஏற்பட்டால் அல்லது உதவி தேவைப்பட்டால் உடனடியாகக் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கின் தற்போதைய நெருக்கடியான சூழலில், அங்குள்ள சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து இராஜதந்திர நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் குவைத் தூதுவர் லக்ஷித ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

### நேருக்கு நேர் மோதிய மோட்டார் சைக்கிள்கள்:

# இரு வேறு விபத்துகளில் பெண் உட்பட இருவர் பலி!



**(க.மகாதேவன்)**

நாட்டின் இரு வேறு பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளதோடு, மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்துக்கள் குறித்த விரிவான விவரங்கள் வருமாறு:

**களுபோவில விபத்து: குடும்பத்தலைவர் பலி**

களுபோவில - தெஹிவளை வீதியில், களுபோவில பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

தெஹிவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றுமொரு வீதிக்குத் திரும்ப முற்பட்டபோது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் பலமாக மோதியுள்ளது.

விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களின் ஓட்டுநர்களும், பின்னால் அமர்ந்து பயணித்த ஒருவரும் படுகாயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**மதவாச்சி விபத்து: பெண் ஓட்டுநர் பலி**

மதவாச்சி – கெபித்திகொல்லேவ வீதியின் ஹீரல்லுகம பகுதியில் மற்றுமொரு கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹீரல்லுகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் பெண் ஒருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

முதலில் கெபித்திகொல்லேவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள், மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், எடவீரகொல்லேவ பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஓட்டுநர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துக்கள் தொடர்பில் களுபோவில மற்றும் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வீதி ஒழுங்குகளை மீறுவதே இத்தகைய விபத்துக்களுக்கு முக்கிய காரணம் எனப் பொலிஸார் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## வடமராட்சி கிழக்கில் சோகம்

# தனிமையில் வசித்து வந்த இளைஞர் சடலமாக மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை



(வடமராட்சி நிருபர்)

யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனை – வலிக்கண்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த இளைஞர் ஒருவர், தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் ஜதுர்சன் (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் குறித்த வீட்டில் தனியாக வசித்து வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று திங்கட்கிழமை காலை, அந்த வீட்டின் பகுதியிலிருந்து கடும் துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, இளைஞர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார். உயிரிழந்து சில நாள்கள் ஆகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன், ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர், சடலத்தைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், முறையான பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் மருதங்கேணி பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

இந்த விபரீத முடிவுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மருதங்கேணி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யார் நடத்தினாலும்...

திணைக்களத்தில் இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கையின் இந்தத் தீர்க்கமான நிலைப்பாட்டை அறிவித்தார்.

அவர் வெளியிட்ட முக்கிய கருத்துக்கள் வருமாறு:–

"எந்த இடத்தில் நடந்தாலும், எவர் நடத்தினாலும் போரை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்பதே இந்த அரசின் கொள்கை. போரால் விளைவது உயிரிழப்புகளும், சொத்துச் சேதங்களும் மாத்திரமே. எனவே, உலக அமைதிக்காக இலங்கை எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

மத்திய கிழக்கில் நிலவும் இந்த அசாதாரண சூழல், உலக அமைதியைக் குலைப்பதுடன் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் உலகப் பொருளாதாரத்தில் பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்." – என்றார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்துப் பேசிய அமைச்சர், "அங்குள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்கவும் வெளிவிவகார அமைச்சு ஊடாகத் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு குறித்தும் அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

உலக நாடுகளுக்கிடையிலான மோதல்கள் இராஜதந்திர ரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதையே இலங்கை விரும்புகின்றது." – என்றார்.

### அமெரிக்காவை...

அவரது உரையின் அதிரடிச் சுருக்கம் இதோ:–

"இன்று ஆட்சிப்பீடத்தில் இருக்கும் ஜே.வி.பி தலைமையிலான அரசாங்கம், தமக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகளைக் காலால் மிதித்து வருகின்றது. அன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்தவர்கள், இன்று அதிகாரத்திற்கு வந்தவுடன் அதைவிடக் கொடூரமான அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டுவரத் துடிக்கின்றனர். இலவசக் கல்வி மற்றும் சுகாதாரம் பேசியவர்கள், இன்று சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடுகின்றனர்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, இந்தியா மற்றும் அமெரிக்காவிடம் முற்றாக மண்டியிட்டுள்ளது. மோடி மற்றும் ட்ரம்ப் ஆகியோரின் பொருளாதாரத் தேவைகளுக்காக இலங்கையின் நிலங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை விற்பனை செய்யத் திட்டமிட்டு, முழுநாட்டையுமே காட்டிக்கொடுத்துள்ளது.

முகங்களை மாற்றுவதாலோ அல்லது கட்சிகளை மாற்றுவதாலோ இங்கு விடிவு பிறக்காது. தற்போதுள்ள திருடர்களைப் பாதுகாக்கும் கொள்கையைத் தகர்க்க வேண்டுமானால், உழைக்கும் வர்க்கத்தினர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதே ஒரே தீர்வாகும். பேரசுவாதம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிராக ஒரு உண்மையான மக்கள் சக்தியைக் கட்டியெழுப்ப அனைத்து உழைக்கும் மக்களும் ஓரணியில் திரள வேண்டும்." – என்றும் குமார் குணரத்தினம் அறைகூவல் விடுத்தார்.

### வெளிநாட்டவர்களுக்கு..

தீர்மானித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

"விமானப் போக்குவரத்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள், காலாவதியான விசா காரணமாக சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ளக் கூடாது என்பதற்காக இந்த மனிதாபிமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வார கால விசா நீடிப்புக்காக எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது." – என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக பல சர்வதேச விமான நிறுவனங்கள் தமது சேவைகளை இடைநிறுத்தியுள்ளன. இதனால் இலங்கைக்குச் சுற்றுலா வந்த மற்றும் பல்வேறு தேவைகளுக்காக வந்திருந்த வெளிநாட்டவர்கள் தாயகம் திரும்ப முடியாமல் சிக்கியுள்ளனர். அவர்களுக்கான நிவாரணமாகவே இந்தத் தீர்மானம் அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுள்ளது.

விசா காலத்தை நீடிப்பதன் மூலம் வெளிநாட்டவர்கள் சட்டப்பூர்வமாக நாட்டில் தங்கியிருக்க முடியும் என்றும், அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளை வழங்க குடிவரவு குடியகல்வு திணைக்களம் தயாராக உள்ளது என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

### அவசர கூட்டத்துக்கு..

பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவசர விசேட கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:–

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக, அங்கு பணிபுரியும் இலட்சக்கணக்கான இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் தமது ஆலோசனைகளை முன்வைக்கவுள்ளன.

இந்த மோதல்கள் காரணமாக எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம், எரிபொருள் விநியோகம் மற்றும் ஏனைய அத்தியாவசியத் துறைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தின் முடிவில், மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்தவும், உரிய அழுத்தங்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடி இலங்கைக்குப் பாரிய சவாலாக உருவெடுத்துள்ள நிலையில், எதிர்க்கட்சிகளின் இந்த ஒன்றுகூடல் அரசியல் களத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாட்டின் வறுமை நிலை

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை, இலங்கையின் அதிகாரபூர்வ வறுமைக் கோட்டை ஜனவரி 2026 இல் ஒரு நபருக்கு மாதத்திற்கு ரூ. 16,730 ஆக நிர்ணயித்துள்ளது. அதாவது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் மாதாந்தம் ரூ. 16,730 வருமானத்தைக் கொண்டிராத குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களாகக் கருதப்பட வேண்டும்.

இலங்கையில் வறுமை நிலை 2019 இல் 13.1 வீதமாக இருந்தது.

பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த வறுமை நிலை 2023 இல் சுமார் 25.9 சத வீதமாக அதிகரித்தது. அதாவது, அன்றைய நிலையில் நாட்டில் நான்கில் ஒரு பகுதியினர் - கால் பங்கினர் - வறுமைக்கோட்டிற்குகீழ்வாழ்கின்றனர். இப்போது அதன் நிலைமை என்னவென்பது இன்னும் கணிப்பிடப்படவில்லை. கிராமப்புறங்களில் வறுமை விகிதம் 2024இல் 4.86 வீதத்தால் குறையும் என மதிப்பிடப்பட்டாலும் அது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

ஆயினும் வறுமைக் கோட்டைத் தீர்மானிப்பதற்கான தனி நபரின் ஆகக் குறைந்த வருமான எல்லை தொடர்ந்து அதிகரித்து வருகின்ற காரணத்தால் வறுமை விகிதமும் அதிகரிக்கும் நிலைமையே தென்படுகின்றது.

நாட்டில் வாழ்க்கைச் செலவு தொடர்பான ஒரு தசாப்த கால ஒப்பீடு வாழ்க்கைச் செலவுகளின் கூர்மையான உயர்வைக் காட்டுகிறது. 2012 -13 இல், வறுமைக் கோடு மாதத்திற்கு ரூ. 5,000 க்குச் சற்று மேலே இருந்தது. படிப்படியாக 2016 இல் ரூ. 6,000 ஆகவும், ரூ. 2019 ஆம் ஆண்டுக்குள் ரூ. 7,000 ஆகவும் அது உயர்ந்தது. பொருளாதார சீர்குலைவுகள் மற்றும் பணவீக்கம் இந்த அதிகரிப்பைத் துரிதப்படுத்தின. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 16,000 ஐத் தாண்டிய இந்த செலவினக் கணக்கு கடந்த மாதம் ரூ. 16,730ஐ எட்டியது.

மாவட்ட அளவிலான பகுப்பாய்வு தீவு முழுவதும் கணிசமான மாறுபாட்டைக் காட்டுகிறது. கொழும்பு தொடர்ந்தும் உயர்வான வறுமைக் கோட்டைக் குறியைக் கொண்ட மாவட்டமாக உள்ளது. அங்கு, ஜனவரி 2026 இல் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு தனிநபர் மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 18,044 செலவிட வேண்டும். இதைத் தொடர்ந்து மேற்கு மாகாணத்தின் பிற மாவட்டங்கள் உள்ளன. கம்பஹா ரூ.17,951 மற்றும் களுத்துறை ரூ. 17,562. தீவு முழுவதும் உள்ள பிற முக்கிய மாவட்டங்களும் மாறுபட்ட பொருளாதார இயக்கவியலை எடுத்துக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, வறுமைக் கோட்டு எல்லைக் குறியீடு கண்டியில் ரூ. 16,983, காலியில் ரூ. 16,998, குருநாகலில் ரூ. 16,434 மற்றும் யாழ்ப்பாணத்தில் ரூ. 16,327 ஆக உள்ளது. மாறாக, மொனராகலை மாவட்டங்களில் மிகக் குறைந்த குறைந்தபட்சத் தேவையை ரூ. 15,997 ஆக பதிவு செய்தது.

வெறும் வருமான விடயத்தில் மட்டுமல்லாமல் கல்வி, சுகாதாரம், மற்றும் வாழ்க்கைத்தரம் (பாதுகாப்பான குடி தண்ணீர், கழிப்பறை வசதி) ஆகியவற்றின் அடிப்படையிலான பல்பரிமாண வறுமையும் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

வறுமை நிலைமை தொடர்பான இலங்கையின் இத்தகைய இக்கட்டு நிலை அடுத்த சில ஆண்டுகளுக்கு இதே மட்டங்களில் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறியுள்ளார். இந்த பின்னடைவு நிலைமையிலிருந்து நாடு எப்படி மீண்டெழுப் போகின்றது?



# மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்

## பஞ்சரத பவனி இன்று நடைபெற்றது

(நடராஜா மலர்வேந்தன்)

மாத்தளையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த பஞ்சரத பவனி இன்று பக்தி பூர்வமாக ஆயிரக்கணக்கான அடியார்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மங்கள நாதம் ஒலித்திட வேத மந்திரங்கள் முழங்கிய நிலையில், அம்மனின் பஞ்சரதங்கள் ஆலய வீதிகளில் வீதியுலா வந்தன. இந்த நிகழ்வில் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

இவ்வருட திருவிழா கடந்த மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# அமெரிக்கா – ஈரான் போர் தொடர்பில் சர்வதேச நாடுகள் இரட்டை நிலைப்பாட்டில்

## கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

இன்றைய சர்வதேச அரசியல் சூழ்நிலையில், உலக சக்திகளின் மோதல்கள் மற்றும் பிராந்திய அரசியல் கூட்டணிகள் காரணமாக பல்வேறு நாடுகள் பெரும் அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், இரு வலுவான சக்திகளின் ஆதரவுடன் செயல்படும் தரப்புகளுக்கு எதிராக ஒரே நாடு போராடும் சூழல் உருவாகியுள்ளது என்று ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சில அரபு நாடுகளில் நிலவும் அரசியல் தலைமைகள் வெளிநாட்டு தாக்கங்களின் கீழ் செயல்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பயங்கரவாதம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அரங்கில் பலர் வலியுறுத்தி வரும் நிலையில், காஸா, ஈரான் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட பொதுமக்கள் உயிரிழப்புகள் தொடர்பாக உலக நாடுகள் ஒரே மாதிரியான அணுகுமுறையை கடைப்பிடிக்கவில்லை.

சர்வதேச சமூகம் தாராளமான மற்றும் சமநிலையான நிலைப்பாட்டை எடுத்து, அமைதி மற்றும் மனிதாபிமான அடிப்படைகளை பாதுகாக்க வேண்டும்.

இறுதியாக, தற்போதைய உலக அரசியல் பதற்ற நிலைமைகள் விரைவில் தீர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மற்றும் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்பதே தனது பிரார்த்தனையும் நம்பிக்கையும்.– என்றுள்ளது.

# தனியார் அனல் மின் நிலையத்தில் திருடிய சந்தேகத்தில் இருவர் கைது!

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலம் செயற்படாமல் இருந்த தனியார் அனல் மின் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் சந்தேகத்தின் பேரில் நிந்தவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக தனியார் அனல் மின் நிலையத்தில் இடம்பெற்று வந்ததாக கூறப்படும் இந்தத் திருட்டு தொடர்பில் உரிமையாளர் முறைப்பாடு ஒன்றை அண்மையில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் வழங்கியிருந்தார்.

இதற்கமையச் செயற்பட்ட பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சனிக்கிழமை அம்பாறையில் இருந்து தடயவியல் பொலிஸாரை மேலதிக விசாரணைக்கு அழைத்திருந்தனர். அத்துடன் இந்தச்






சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் காவலாளி உட்பட மற்றுமொரு சந்தேக நபரையும் நிந்தவூர் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைதான சந்தேக நபர்கள் இருவரையும் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் ஒரு சந்தேக நபர் வாயு துப்பாக்கி ஒன்றை வைத்துக் கொண்டு குறித்த தனியார் அனல் மின் நிலையத்தில் உள்ள புறாக்களை வேட்டையாட வந்திருந்தமை ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிவந்துள்ளது.

அத்துடன் சந்தேக நபர் வசம் இருந்து மீட்கப்பட்ட வாயு துப்பாக்கி குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அயத்துல்லா அலி காமெனியின் இழப்புக்கு அட்டாளைச்சேனையில் துக்கம் அனுஷ்டிப்பு!

**(நூருல் ஹுதா உமர்)**

உலக இஸ்லாமியத் தலைவர்களில் திடமான தலைவன் அயத்துல்லா அலி காமெனியின் இழப்பு மற்றும் அவரது குடும்பத்தினர், அப்பாவிக் குழந்தைகளை நினைவு கூர்ந்து, பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை பகுதிகளில் இன்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

ஸியோனிஸ ஒடுக்குமுறைக்கு எதிரான போரில் தனது உயிரைத் தியாகம் செய்த இலங்கையின் நெருங்கிய ஒரு மூத்த நண்பனின் மறைவுக்கு, இலங்கையின் உயர்ந்த அரசியல் மட்டங்களில் இருந்து இன்னும் எந்த அனுதாபச் செய்தியோ அல்லது அதிகாரப்பூர்வமான நிலைப்பாட்டோ வெளிவராத நிலையில் இந்த துக்கக் கொடிகளை மக்கள் ஏற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






# 3 ஆயிரத்து 416 டெங்கு நோயாளர்கள் இரண்டு மாதங்களில் மட்டும் பதிவு!

**(உடப்பு நிருபர் க.மகாதேவன்)**

இந்த வருடத்தில் இதுவரை 13 ஆயிரத்து 416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், டெங்கு நோயால் இது வரை 4 மரணங்களும் பதிவாகியுள்ளன என்று அந்தப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.




காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாகத் தகுதிவாய்ந்த வைத்தியரை நாடிச் சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பிரிவினர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்




(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமானது வேலணைப் பிரதேச சபையுடன் இணைந்து அண்மையில் வேலணைப் பிரதேசத்தில் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது.

அவுஸ்ரேலியா உாயசவைல ரயனெ அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இந்த மாணவர்களுக்கான உதவித்திட்டம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

றெஜி மற்றும் போல் ஆகியோருடைய ஒருங்கமைப்பில் மேற்படி செயற்றிட்டம் இடம்பெற்றது.






# தொழிலாளர் சம்பள அதிகரிப்பால் கோணக்கலையில் கொண்டாட்டம்!

**(பசறை நிருபர் நடராஜா மலர்வேந்தன்)**

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை அடுத்து, பதுளை மாவட்டம் பசறை பிரதேசத்திலுள்ள கோணக்கலை தோட்ட தொழிலாளர்கள் நேற்று தொழிற்சாலை முன்றலில் பாற்சோறு பொங்கிக் கொண்டாடினர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி அரசின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்ணன் செல்வராஜ் கலந்து கொண்டு தொழிலாளர்களுடன் இணைந்து கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

சம்பள அதிகரிப்பை நடைமுறைப் படுத்திய அசுக்குத் தொழிலாளர்கள் இதன்போது தங்களது நன்றியைத் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும் முக்கிய தீர்மானமாக அமையும் எனவும் குறிப்பிட்டனர்.

மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகளுக்கு தீர்வாக இந்த சம்பள உயர்வு அமைந்துள்ளது என்று தொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வு தொழிலாளர்களின் உற்சாகமான பங்கேற்புடன் நடைபெற்றது.





# கிரிக்கெட் மைதானப் புனரமைப்புக்கு கல்லடி சிவானந்தாவில் அடிக்கல்!





**(வி.ரி.சகாதேவராஜா)**

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் ஆரம்பித்த மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கிரிக்கெட் விளையாட்டு மைதான புனரமைப்புக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வு இன்று திங்கள்கிழமை மாசிமக சுப வேளையில் நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் சுவாமி நீலமதவானந்தாஜி பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல் நட்டு வைத்தார்.

தொடர்ந்து சிவானந்தா வித்தியாலய அதிபர் உள்ளிட்டோர் அடிக்கல் நட்டனர்.



# கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் இன ஐக்கிய இப்தார் நிகழ்வு

**(வவுணதீவு நிருபர்)**

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன ஐக்கிய இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (01) மாலை காத்தான்குடியில் நடை பெற்றது.

ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவர் ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வானது மாலை 5.30 மணியளவில் ஆரம்பமாகி இஸ்லாமிய மத பிரார்த்தனை இடம் பெற்றதைத் தொடர்ந்து, இப்தார் புனித நோம்பு மற்றும் நாட்டின் சமாதானத்திற்கும் இன ஐக்கியத்திற்கும் ஊடகவியலாளர்களின் பங்கு என்பது பற்றிய உரைகள் இடம் பெற்றதையடுத்து. குறித்த நேரத்தில் நோம்பு திறக்கும் நிகழ்வும் நடை பெற்றது.

இந்நிகழ்வில் இஸ்லாம், இந்து மற்றும் கிறிஸ்தவ மத தலைவர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் மற்றும் இஸ்லாமிய மத அறிஞர்கள், சர்வமத அமைப்பின் மாவட்ட இணைப்பாளர், வர்த்தகர்கள் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.











# வருடாந்த தேர்த் திருவிழா!

**(பூ.லின்ரன்)**

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பகுதியில் நெத்திலி ஆற்றம் கரையில் அமர்ந்து அடியார்களுக்கு அருள் பாலித்துவரும் நெத்தடி ஆறு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாசி மக அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது.







# ஆலையடிவேம்பு சின்னமுகத்துவாரத்தில் பாரம்பரிய உணவு விற்பனை நிலையம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைள் அமைச்சின் 2.4 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ், ஆலயடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சின்னமுகத்துவாரப் பகுதியில் எமது முன்னோர்களின் பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்யும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியல் பேரவை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜ், ஆலயடிவேம்பு தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஆர். ரதீசன், பிரதேச சபை உறுப்பினர்கள், ஆலயடிவேம்பு பிரதேச பிரஜாசக்தி தவிசாளர்கள் உட்பட பிரதேச வைத்திய அதிகாரி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# மக்களின் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்தும் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் எதிர்ப்போம்

## கிராஞ்சி மக்கள் ஒன்றுகூடித் தீர்மானம்



(சுபேசன்)

மக்களின் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்தும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமாக இருந்தாலும் ஊர் கூடி எதிர்ப்போம் என்று பூநகரி கிராஞ்சி மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அது தொடர்பிலான மக்கள் ஒன்றியம் ஒன்றையும் தெரிவு செய்துள்ளனர்.

பூநகரி – கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலய முன்றலில் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய மூன்று கிராமங் களைச் சேர்ந்த பொது அமைப்புகள், பொது மக்கள் ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்றுகூடி இந்த விடயம் தொடர்பில் கருத்தாய்வில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து மேற்கண்டவாறு தீர்மானம் எட்டப்பட் டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

மிக நீண்ட காலப் பாரம்பரியம் உடைய கிராமங்கள், மக்களின் வாழ் விடங்கள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். அபிவிருத்தி தொடர்பில் அரசாலும், நிறுவனங்களாலும் முன் னெடுக்கப்படும் ஆய்வுகள், செயற் றிட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்வை அச்சுறுத்துவதாகவோ அல்லது நீண்ட கால, குறுகிய கால பாதிப்புகளை உண்டு பண்ணுவதாகவோ அமையக் கூடாது.

குறிப்பாக கனிம மணல் அகழ்வு, சுண்ணக் கல் அகழ்வு, காற்றாலைத் திட்டம் ஆகியவற்றால் மக்கள் குடி யிருப்புகள், மக்களுக்கு பலன் தரக் கூடிய தாவரங்கள் அழிவடைந்து நீண்ட கால அடிப்படையில் மக்களுடைய இருப்பு என்பது கேள்விக்குள்ளாகும் நிலைமை ஏற்படலாம்.

நீண்ட கால அடிப்படையில் மக்க ளுடைய இருப்பை கேள்விக்கு உள்ளாக் கும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோர் மக்களின் வாழ்வியலை பற்றிச் சிந்திப்பதில்லை.

மாறாக தமது திட்டத்தின் நோக் கங்களை அடைவதற்காக மாத்திரமே சிந்திக்கின்றனர்.

கிராஞ்சியின் விவசாய வளம் மற்றும் கடல் வளம் போன்றவற்றை பேணி அதிலிருந்து பெறப்படும் உற்பத்தி பொருள்களை மதிப்புக்கூட்டி சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் இந்த சமூகம் பொருளாதாரத்தில் முன்னேறுவதுடன் மக்களின் நீண்ட கால வாழ்க்கையையும், பாதுகாப்பை யும் உறுதிப்படுத்த முடியும்.

சுண்ணக்கல் அகழ்வுக்காகத் தரையை ஆழமாக்குதல், காற்றாலை திட்டங்களுக்காக தாய்ப்பாறையைத் தேடி நிலத்தை ஆழமாக்குதல் போன்ற செயற்பாடுகளால் நிலத்தடி நீர் மாசு படுகின்றது. நன்னீரும் உவர் நீராக மாறுகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் பிரதேச மக்களின் வாழ்வுக்கு முடிவு கட்டுகின்ற நிலைமைதான் ஏற்படும்.– என்று தெரிவிக்கப்பட்டது.

விசேடமாக மக்களுக்கு ஆபத் தில்லாத அபிவிருத்தி திட்டங்களை வரவேற்பதோடு, தெளிவில்லாத அல்லது மறைமுக உள்நோக்கம் உடைய திட்டங்களை மக்கள் அனை வரும் ஒற்றுமையாக நிராகரிப்பது என்றும் கூட்டத்தில் ஒருமனதாக தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் அடிப்படையில் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு பொன்னாவெளி மற்றும் பாலாவி ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து மக்கள் ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டு சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பது எனவும் மாறாக இந்தக் கிராமம் சார்ந்த மக்களுக்குப் பாதிப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கு உடந்தையாக இருப்ப தில்லை எனவும் அதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதென வும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது மக்கள் ஒன்றியத் தலைவராக கிராஞ்சியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கேசவன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் செய லாளர், பொருளாளர், நிர்வாக உறுப் பினர்களும் தெரிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை நிர்வாகத் தெரிவு இடம்பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.



# போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை





(ஜலீல் ஜீ)

போதைப் பொருள் பயன்பாட்டை ஒழிக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் “நாடு முழுவதும் ஒன்றுபட்டு” தேசிய நடவடிக்கைக்கு அமைவாக அம்பாறை நகரில் பொது மக்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அம்பாறை பிரதேச செயலாளர் திலின விக்ரமரத்னவின் வழிகாட்டுதலின் கீழ், உதவி பிரதேச செயலாளர் சமாதி அகலகொடுவவின் பங்கேற்புடன் நகர மையத்தில் விழிப்புணர்வு நடைபயணமும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

இதன்போது பிரதேச செயலாளர் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து பொதுப் போக்குவரத்து வாகனங்கள், ஓட்டோகள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் பொது மக்களுக்கு போதைப்பொருள் தடுப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினர்.

அத்துடன், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. போதைப் பொருள் எதிர்ப்பு தொடர்பான ஸ்டிக்கர்கள் ஒட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

### போதைப் பொருளுக்கு எதிரான

# தேசிய செயற்றிட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பில் இடம்பெற்றன!



(ஜதுர்சயன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நாடளாவிய ரீதியில் போதைப் பொருளுக்கு எதிரான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஒர் அங்கமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் “முழு நாடும் ஒன்றாக” தேசிய செயற்றிட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் தலைமையில் மாவட்ட போதைப்பொருள் முற்தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஸ் ஏற்பாட்டில் காந்தி பூங்காவில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது “விற்கின்ற – அடிமையான அனைவருக்குமான அறிவித்தல் – அகன்று செல்” எனும் வாசகத்தை மையமாகக் கொண்டு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

மார்ச் மாதம் ஒன்று முதல் “முழு நாடும் ஒன்றாக – தேசிய செயல்” திட்டத்துடன் இணைந்து போதைப் பொருள் தடுப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வழங்கப்பட்டன.

போதைப்பொருளுக்கு எதிரான வாசகம் கொண்ட ஸ்டிக்கர்கள் பஸ்கள், ஓட்டோகளில் ஒட்டப்பட்டன.

நாட்டின் வளமான மாணவர்கள், இளைஞர், யுவதிகளின் வாழ்வைச் சீரழிக்கும் போதைப்பொருள் பற்றிய தகவல்களை 1818 எனும் இலக்கத்தினுடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், பொலிஸ் உயர் அதிகாரிகள், போதைப் பொருள் முற்தடுப்பு உத்தியோகத்தர்கள் சாரண மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.







# தி.மு.க ஆட்சியை அகற்ற தமிழக மக்கள் தீர்மானம்

## மதுரையில் பிரதமர் மோடி தெரிவிப்பு

தமிழகத்தில் அரசு வேலைவாய்ப்பு, பணியிட மாற்றம், 'டெண்டர்' ஒப்பந்தங்கள், மணல் திருட்டு என 40 ஆயிரம் கோடி இந்திய ரூபா அளவுக்கு ஊழல் நடந்துள்ளது. இதனால், தமிழகத்தில் இருந்து திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்று மதுரையில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் 2 ஆ வது தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் மதுரை மண்டேலா நகரில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றுகையிக்,

"தமிழகத்தில் இருந்து திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்று மக்கள் தீர்மானித்துவிட்டனர். தமிழக மக்கள் 25 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த 2021 இல் தி.மு.கவுக்குப் பெரும்பான்மை பலத்தைக் கொடுத்தனர். ஆனாலும், அவர்கள் நல்லாட்சியை தரவில்லை. மாநிலத்தை சூறையாடினர்.

பரம்பரை ஆட்சியை முன்னெடுக்கின்றனர். மதுரை மாநகரம் எம்.ஜி.ஆருக்கு உறுதுணையாக நின்றது. இதனால், மதுரை என்றாலே தி.மு.கவுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. ஊழல் காரணமாக மதுரை மேயர் ராஜினாமா செய்தார்.

தி.மு.கவினர் அவர்களும் பணியாற்ற மாட்டார்கள். மற்றவர்களையும் பணியாற்ற விடமாட்டார்கள். 'பணம் நமக்கு, பிரச்சினைகள் மக்களுக்கு' என்பதே தி.மு.க. மொடல். தமிழகத்தில் கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 12 ஆயிரம் கோடி இந்திய ரூபா மதிப்பில் 74 திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இதனால் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள், புதிய பொருளாதார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. உரிமைகளுக்காக வாய்கிழிய பேசும் தி.மு.க, மத்தியில் ஆட்சியில் இருந்தபோது எதுவுமே செய்யவில்லை.

காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து 60 ஆண்டுகளுக்கு முன்பே நீக்கிய மாநிலம் தமிழகம். இதனால் தான் கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்து தமிழக மக்களை வஞ்சம் தீர்த்தது காங்கிரஸ் அரசு. அப்போது திமுக வாய்மூடி மவுனமாக இருந்தது. அவர்களது கூட்டணி ஆட்சியில்தான் ஜல்லிக்கட்டை தடை செய்தனர். பா.ஜ.க. அரசுதான் மீண்டும் கொண்டு வந்தது.

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாள்தோறும் அதிகரிக்கின்றன. மது, போதை மாஃபியாக்களால் தங்களது குடும்பங்கள் பாதிக்கப்படுவதை பெண்கள் வேதனையோடு பார்க்கின்றனர். ஜெயலலிதா ஆட்சியில் தங்கள் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருந்தது என்பதை நினைத்துப் பார்க்கின்றனர்.

தமிழகப் பெண்களுக்கு உறுதியளிக்கிறேன். தே.ஜ.கூட்டணி அரசு அமைந்ததும் சட்டம் - ஒழுங்கில் கவனம் செலுத்துவோம். குற்றவாளிகள், போதை மாஃபியாக்கள் சிறையில் தள்ளப்படுவார்கள். பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம் உறுதி செய்யப்படும்.

அரசியலில் நேர்மைக்கு எடுத்துக் காட்டாக திகழ்ந்தவர் காமராஜர். அவருக்கு எதிர்மாறாக இருக்கிறது தி.மு.க. அரசு வேலைவாய்ப்பு, பணியிட மாற்றம், ஒப்பந்தங்கள், மணல் திருட்டு என 40 ஆயிரம் கோடி இந்திய ரூபா அளவுக்கு ஊழல் நடந்துள்ளது. பொதுவாக, மக்கள் பணியைச் செய்வதில்தான் அமைச்சர்களிடம் ஆரோக்கியமான போட்டி இருக்கும். ஆனால், மோசடி செய்வதில் தான் தி.மு.க. அமைச்சர்களிடம் போட்டா போட்டி உள்ளது.

மனசாட்சி இன்றி, ஏழைகள், இளைஞர்கள், விவசாயிகளிடம் இருந்து திருடுகின்றனர். இப்படிப்பட்ட ஊழல் அரசு மேலும் தொடர தார்மீக உரிமை இல்லை. இதனால், தமிழக மக்கள் தே.ஜ.கூட்டணி அரசை கொண்டுவர தீர்மானித்துவிட்டனர். எங்கள் கூட்டணி தூய்மையான, திறமையான ஆட்சியை வழங்கும்.

சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தை செய்துள்ளது. இதன்மூலம் 28 முன்னேறிய நாடுகளுடன் இணைந்துள்ளோம். இதனால் இளைஞர்கள், பணியாளர்கள், விவசாயிகள், தொழில் முனைவோருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

இளைஞர்களுக்கு பல லட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். உலக அளவில் போட்டியிட்டு வெற்றி பெறும் சந்தர்ப்பம் கிடைக்கும். இவை அனைத்தும் கிடைக்க வேண்டும் என்றால், உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஓர் அரசு இருக்க வேண்டும்.

தே.ஜ.கூட்டணி அரசால் மட்டுமே மக்களை மையமாகக் கொண்ட, நிலையான ஆட்சியை வழங்க முடியும். தமிழகத்தின், இந்தியாவின் வளர்ச்சியை நாங்கள் உறுதி செய்வோம்." என்று தெரிவித்தார்.



## விமான நிலையங்கள் மூடல்:

# வளைகுடா நாடுகளில் சிக்கிய நூற்றுக்கணக்கான இந்தியர்கள்

மத்திய கிழக்கில் போர் தீவிர மடைந்துள்ள நிலையில், டுபாய், ஷார்ஜா போன்ற முக்கிய விமான நிலையங்கள் மூடப்பட்டதால் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் சிக்கித் தவிக்கின்றனர்.

இதில் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, பாலிவுட் நடிகை சோனல் சவுகான், வங்காள நடிகை சுபாஸ்ரீ கங்குலி உள்ளிட்ட பிரபலங்களும் அடங்குவர்.

ஜனத் இந்தி படத்தில் நடித்த பிரபல பாலிவுட் நடிகை சோனல் சவுகானும், டுபாய் சென்று நாடு திரும்ப முடியாமல் தவிக்கிறார்.

இந்நிலையில் அவர் இன்ஸ்டாகிராமில் பிரதமர் மோடிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். "வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றத்தால், விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. நான் பாதுகாப்பாக நாடு திரும்ப மத்திய அரசு உதவி செய்து வழிகாட்ட வேண்டும்" என கூறியுள்ளார்.

பிரிட்டனில் நடைபெறவுள்ள ஆல் இங்கிலாந்து சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கச் சென்ற பி.வி. சிந்து மற்றும் அவரது பயிற்சியாளர் டுபாய் விமான நிலையத்தில் சிக்கியுள்ளனர். அவர்கள் தங்கியிருந்த பகுதிக்கு அருகிலேயே ஏவுகணை தாக்குதல் நடந்ததாகவும், இதனால் நிலைமை மிகவும் அச்சமூட்டுவதாக இருப்பதாகவும் சிந்து தனது சமூக சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேபோல், தனது மகனுடன் டுபாயில் சிக்கியுள்ள நடிகை சுபாஸ்ரீ கங்குலி, தாங்கள் தங்கியிருக்கும் பாம் ஜுமேரா ஹோட்டலுக்கு அருகிலும் வெடிச்சத்தங்கள் கேட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ சஞ்சய் சுக்லா உட்பட சுமார் 700-க்கும் மேற்பட்டோர் ஐக்கிய அரபு அமீரகத்தில் சிக்கியுள்ளனர். சஞ்சய் சுக்லா வெளியிட்ட காணொலியில், அவர் தங்கியிருக்கும் இடத்திலிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் குண்டுவெடிப்பு ஏற்பட்டு கரும்புகை எழும்புவதைக் காண முடிகிறது.

புனேவைச் சேர்ந்த 84 எம்.பி.ஏ. மாணவர்களும் கல்விச் சுற்றுலாவுக்காகச் சென்று தற்போது நாடு திரும்ப முடியாமல் தவிக்கின்றனர். ஷார்ஜா விமான நிலையத்தில் சிக்கியுள்ள பலர், கையில் போதிய பணமோ அல்லது அத்தியாவசிய மருந்துகளோ இல்லாமல் தவிப்பதாக மத்திய அரசுக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், வான் வெளிப் போக்குவரத்து சீரானதும் இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளது.

இந்த சூழலில் ஏர் இந்தியா நிறுவனம் ஏற்கனவே சுமார் 50 சர்வதேச விமானச் சேவைகளை ரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் தலைமையகம் தாக்குதலின்போது அழிப்பு

## அமெரிக்க இராணுவம் தகவல்

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் (ஐ.ஆர்.ஜி.சி) தலைமையகத்தை அழித்துவிட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

'பாம்பின் தலை வெட்டப்பட்டது' என அமெரிக்கா இதை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து கூட்டாக ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளன. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் காமேனி, அவரது குடும்பத்தினர், ஈரானின் முக்கிய தலைவர்கள் உட்பட சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்காவின் நேச நாடுகளாக உள்ள பஹ்ரைன், ஜோர்டான், குவைத், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது.

"கடந்த 47 ஆண்டு காலத்தில் ஐ.ஆர்.ஜி.சி. சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர்களை கொன்றுள்ளது. இந்நிலையில், நேற்று அமெரிக்கா மேற்கொண்ட பெரிய அளவிலான தாக்குதலில் பாம்பின் (ஐ.ஆர்.ஜி.சி) தலை வெட்டப்பட்டது. இதன் மூலம் இனி ஐ.ஆர்.ஜி.சி-க்கு தலைமையகம் என்பது இருக்காது. பூமியில் மிகவும் சக்தி வாய்ந்த ராணுவப்படையை அமெரிக்கா கொண்டுள்ளது. ஈரான் மீதான தாக்குதல் தொடரும்" என அமெரிக்க இராணுவம் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான காணொலி ஒன்றையும் அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ளது.

ஈரான் இராணுவத்தின் சக்தி வாய்ந்த படைப்பிரிவாக இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (ஐ.ஆர்.ஜி.சி) உள்ளது. கடந்த 1979 இல் இஸ்லாமிய புரட்சிக்கு பிறகு இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை காமேனி நிறுவினார். அவரது அறிவுறுத்தலுக்கு இணங்க ஐ.ஆர்.ஜி.சி. செயல்பட்டது.





# லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 31 பேர் பலி

ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலைத் தாக்கியதைத் தொடர்ந்து, லெபனான் மீதான இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 31 பேர் கொல்லப்பட்டனர் என லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானை குறிவைத்து அமெரிக்காவும் இஸ்ரேலும் வான்வழித் தாக்குதலை தொடங்கி நடத்தி வருகிறது. ஈரானும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

மேற்கு ஆசியாவில் நடக்கும் மோதலின் இடையே ஹிஸ்புல்லா படைகள் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் லெபனானின் பெய்ரூட்டில் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது.



இந்தத் தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்துள்ளனர். 149 பேர் காயமடைந்தனர் என லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், குவைத் மீது ஈரான் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்துவதால், அமெரிக்கா அங்குள்ள அமெரிக்கர்களை பாதுகாப்பாக வீட்டிற்குள் இருக்குமாறு அவசர எச்சரிக்கை விடுத்தது.

# ஈரான் தன்னைத்தானே தற்காத்துக்கொள்ளும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை கிடையாது

## தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் தெரிவிப்பு

ஈரான் தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளும் என்றும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் எனவும் ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் அலி லாரி ஜானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில்,

“டொனால்ட் ட்ரம்ப் தனது, 'தவறான நம்பிக்கைகளால்' இந்த பிராந்தியத்தை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளார். அமெரிக்க துருப்புக்களுக்கு உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று இப்போது அவர் கவலைப்படுகிறார்.

தனது ஆளுமையை நிலை நாட்டிக்கொள்வதற்கான விலையை, அமெரிக்க வீரர்கள் மற்றும் குடும்பங்கள் மீது சுமத்துகிறார். இன்று, ஈரான் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்கிறது. ஈரானிய ஆயுதப்படைகள் படையெடுப்பைத் தொடங்கவில்லை. நாங்கள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம்.” என்று தெரிவித்துள்ளார்.



போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஈரான், அமெரிக்காவுடன் ஓமன் அரசு மூலம் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாக அமெரிக்க ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அணுசக்தி தொடர்பாக அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் இந்த பேச்சுவார்த்தையை ஈரான் முன்னெடுப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், அலி லாரிஜானி அதனை மறுத்துள்ளார்.

இதனிடையே, ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள், ஈரான் அரசின் கட்டளை மையங்கள் ஆகியவற்றை தாக்கி அழித்துவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ஈரானின் வான்வழிகளை வசமாக்கியுள்ளோம். தலைநகர் தெஹ்ரானுக்கு மேலே பறந்து ஏராளமான இலக்குகளை இஸ்ரேலிய விமானப் படை அழித்து வருகிறது.

பாலிஸ்டிக் ஏவுகணைத் தளங்கள், தலைமையகங்கள், ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பு, உத்தரவு மையங்கள் உள்ளிட்டவற்றை நாங்கள் அழித்துவிட்டோம். இஸ்ரேல் மீது ஈரான் ஏவிய 50 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்களை இஸ்ரேலின் விமானப்படை ஜெட்களும் இராணுவ ஹெலிகாப்டர்களும் இடைமறித்து அழித்துவிட்டன.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்கத் தூதரகம் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது

குவைத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்தோ அல்லது அதற்கு அருகிலிருந்தோ புகை எழும்புவதைக் காண முடிவதாக ஏ.எஃப்.பி மற்றும் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அப்பகுதியில் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் நோயாளர் காவு வண்டிகள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குவைத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு, மக்கள் வருவதைத் தவிர்க்குமாறும், வீடுகளிலேயே தங்கியிருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள



வழிகாட்டுதலில்,

“தூதரகத்திற்கு வர வேண்டாம். உங்கள் இருப்பிடத்திலேயே பாதுகாப்பாக இருங்கள்; ஜன்னல்களுக்கு அப்பால், கட்டிடத்தின் மிகக் கீழ் தளத்தில் தஞ்சம் அடையுங்கள். வெளியே எங்கும் செல்ல வேண்டாம்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குவைத்தில் உள்ள அமெரிக்கப் பிரஜைகள் "இருக்கும் இடத்திலேயே தஞ்சம் அடையுமாறும் ஏதேனும் தாக்குதல்கள் நிகழும் பட்சத்தில் அதற்கான பாதுகாப்புத் திட்டங்களை மீளாய்வு செய்யுமாறும், வருங்காலத்தில் ஏற்படக்கூடிய கூடுதல் தாக்குதல்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும்.” வலியுறுத்தப்பட்டுள்ளது.

கனடா முரசு
திங்கட்கிழமை | 02/03/2026

கனடாவின் உள்விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்ததே இல்லை



02



# மத்திய கிழக்கில் நடக்கும் போரில் கனடா இராணுவம் பங்கேற்காது

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்ற நிலையைத் தொடர்ந்து, நடைபெற்று வரும் போரில் கனடா இராணுவம் பங்கேற்காது என்று கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு பின்னர் உருவாகியுள்ள நிலைமை குறித்து கருத்து வெளியிட்ட அவர், இந்த மோதலில் கனடா இராணுவமாக ஈடுபடுவதற்கான திட்டம் எதுவும் இல்லை எனத் தெளிவுபடுத்தினார்.**

இந்த நடவடிக்கைகளுக்கான இராணுவ தயாரிப்பிலும் திட்டமிடலிலும் கனடா பங்கேற்கவில்லை எனவும், எதிர்காலத்திலும் இராணுவ ரீதியாக இணைவது எதிர்பார்க்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈரான் அணு ஆயுதம் பெறுவதைத் தடுக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை கனடா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் பிரதமர் கார்னி தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை கனடா ஆதரிப்பதாகவும், அதே நேரத்தில் இந்த கடுமையான சூழலில் பொதுமக்களின் உயிர் பாதுகாப்பு மிக முக்கியமானதாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தினார்.

மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அப்பகுதியில் உள்ள கனடியர்கள் விழிப்புடன் இருந்து உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கனடா அரசு அறிவுறுத்தியுள்ளது.

# மின்டோவில் வீடு தீ விபத்து; 75 வயதுடையவர் உயிரிழப்பு

கனடாவின் மின்டோ பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் சுமார் 2.30 மணியளவில், மின்டோ - நார்மண்டி டவுன்லைன் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து அவசர சேவைகள் அழைக்கப்பட்டன.

தீ விபத்து ஏற்பட்ட வீட்டுக்குள் 75 வயதுடைய ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்




லப்பட்டபோதிலும், பின்னர் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அதிகாரிகள், சம்பவம் தொடர்பாக விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் உள்ளவர்கள் Ontario Provincial Police (OPP) அதிகாரிகளை 1-888-310-1122 என்ற எண்ணில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கிரைம் ஸ்டாப்பர்ஸ் மூலம் ஆன்லைன் வழியாகவோ அல்லது 1-800-222-8477 என்ற எண்ணிலும் தகவல் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

02



# கனடாவின் உள்விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்ததே இல்லை

## இந்திய உயர்ஸ்தானிகர் உறுதி

கனடாவின் உள்விவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையீடு செய்யவில்லை என்று கனடாவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் தினேஸ் கே பாட்நாயக் உறுதியாக தெரிவித்துள்ளார்.

மும்பையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் போது ஊடகங்களிடம் பேசிய அவர், கனடாவில் வெளிநாட்டு தலையீடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிக்கையில், 'இது நடந்ததே இல்லை' என்று தெளிவாகக் கூறினார்.

இந்த கருத்து, பிரதமர் மார்க் கார்னியின் இந்தியா பயணத்தை முன்னிட்டு, இந்தியா இனி கனடாவின் உள்விவகாரங்களில் செயற்படவில்லை என்ற வகையிலான கருத்துக்கள் வெளியாகிய பின்னணியில் வெளிவந்தது.

ஆனால், “இது இனி நடைபெறவில்லை என்ற கேள்வியே இல்லை; அது ஒருபோதும் நடந்ததே இல்லை.” என்று பட்நாயக் வலியுறுத்தினார்.

கனடாவில் வெளிநாட்டு தலையீடு தொடர்பான கசரினைகள் கனடா தானே தீர்க்க வேண்டிய உள்நாட்டு பிரச்சினையாகும் எனவும் அந்த செயல்முறையில் இந்தியா உதவ தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், கனடா மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை ஆலோசகர்களுக்கிடையில் நடைபெற்ற அண்மைய சந்திப்புகள் பல தவறான புரிதல்களை நீக்க உதவியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம், கனடாவின் உள்விவகாரங்களில் இந்திய தலையீடு குறித்த குற்றச்சாட்டுகளை இந்தியா மறுபடியும் மறுத்துள்ளது.

# ஈரானின் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## அனிதா ஆனந்த் வலியுறுத்தல்



மத்திய கிழக்கில் கனடாவின் கூட்டாளி நாடுகளை குறிவைத்து ஈரான் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று கனடாவின் வெளிநாட்டு விவகார அமைச்சர் அனித ஆனந்த் வலியுறுத்தியுள்ளார்.

கட்டாரை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலை தாம் கடுமையாக கண்டிப்பதாகவும், ஈரான் ஏற்படுத்தும் பதற்றத்திற்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்ளும் ஐக்கிய அரபு அமீரகத்துடன் கனடா ஒன்றிணைந்து நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கருத்து, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதலுக்கு பின்னர் ஈரானின் உயரிய தலைவர் அலி கமெய்னி உயிரிழந்தது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து வெளியிடப்பட்டது. தற்போது அமைச்சர் அனிதா ஆனந்த், பிரதமர் மார்க் கார்னியுடன் இந்தியா பயணத்தில் உள்ளார்.

இந்த பயணம், கனடா - இந்தியா வர்த்தக மற்றும் தூதரக உறவுகளை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இதற்கிடையில், ஈரானில் உள்ள கனடியர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க வேண்டும் என்றும் அந்த பிராந்தியத்தில் உள்ள கனடியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க கனடா தொடர்ந்து செயல்படும் என்றும் அனிதா ஆனந்த் தெரிவித்தார்.



# மத்திய கிழக்கு பதற்றத்தில் சிக்கியுள்ளனர் கனேடியர்கள்

அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்த தாக்குதல்கள் ஈரானை குறிவைத்ததைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் உருவாகியுள்ள தீவிரமான போர் பதற்றம் காரணமாக பல சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால், அந்த பிராந்தியத்தில் உள்ள கனடியர்கள் உட்பட பல வெளிநாட்டு பயணிகள் தாய்நாட்டிற்கு திரும்ப முடியாமல் சிக்கியுள்ளனர்.

இந்த வார இறுதியில் ஏற்பட்ட திடீர் பதற்றத்தில், ஈரானின் உயரிய தலைவர் அல் கமெய்னி உயிரிழந்த சம்பவம், தெஹ்ரானில் வெடிப்புகள் மற்றும் அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா அரபு நாடுகளை நோக்கி ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்றமை நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

இந்த பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக சில விமான நிறுவனங்கள் டுபாய், அபுதாபி மற்றும் டோஹா உள்ளிட்ட முக்கிய மத்திய கிழக்கு நகரங்களுக்கு செல்லும் சேவைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

இதன் விளைவாக, ஈரானில் உள்ள கனடியர்கள் தாய்நாட்டிற்கு திரும்ப முடியாமல் உள்ளனர் என்பதுடன், அருகிலுள்ள நாடுகளில் இருந்து கனடாவிற்கு செல்ல முயன்றவர்களின் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விமான ரத்துகளால் பலர் இடைநிலையங்களில் சிக்கியுள்ளனர். பாதுகாப்பு குறித்து கவலைகள் அதிகரித்துள்ளன. ஈரானில் இருந்து திரும்ப முயலும் அல்லது மத்திய கிழக்கிலிருந்து கனடாவிற்கு செல்ல முடியாமல் சிக்கியுள்ளவர்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

